# சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு உழைத்த பண்டிதர் மருதையனார்

தொகுப்பு :- கமுதர்



நாவலர் வழிவந்த சைவமும் தமிழும், அவர்தம் நன் மாணாக்கரால் வேலணைத்தீவு முதலாய தீவகங்களில் விளைவு கொள்ள, அவ் விளைவுக்கு மேலும் பல வழிகளால் வலிவும், கூர்ப்பும், காப்பும் கொடுத்து ஒளிர்தரத் தமிழகச் சைவச் செந்தமிழ்ப் பேரறிஞர் பலர். உண்மையான, தூய்தான சைவத்தையும், தமிழையும் இங்குதான் காண்கின்றோம்'என வியப்பு மீதூர்வதற்குக் காரணராய மந்திர முதல்வர்'வேலணை கிராமசபைத் தலைவராகவும் சரவணையூர் நாகேஸ்வரி வித்தியாலய தலைமை ஆசிரியராகவும் இந்துபோர்ட் இராஜரட்ணத்துடன் தீவகத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு உதவியாக செயலாற்றியவருமான அமரர் இராமநாதர் மருதையனாரின் சேவையை நினைவு கூர்ந்து அவர்களது நினைவு மலரிலிருந்து சில இங்கு வெளிப்படுத்தப்படுகின்றன.

இலவசக் கல்வியை இந்நாட்டில் ஏற்படுத்திய கல்விமந்திரி டாக்டர் சி. டபிள்யூ. டபிள்யூ.கன்னங்கராவின் உரையின் ஒருபகுதி: (தமிழாக்கம் - 1946ஆம் ஆண்டு)

அமைச்சர் வேலணை மத்திய கல்லூரிக் கட்டடத்தை திறந்து வைக்க வந்திருந்த சமயம் மக்கள் கூட்டம் ஜனசமுத்திரமாகக் காட்சியளித்தது. சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி தலைமையில் கூட்டம் ஆரம்பமாகிறது, தமிழ் ஆசிரியர் இ.மருதையனார் தமிழில் வரவேற்புரை கூறுகிறார். அம்மகாவித்தியாலயத்தில் அப்பொழுது அதிபராகவிருந்த.ஏ.கந்தையா இவரது பேச்சை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறுகிறார். கூட்டம் அமைதியுடன் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. மந்திரியார் இவர் பேசும்போது இவரையும், அவர் உரை பெயர்க்கையில் அவரையும் மாறிமாறிப் பார்க்கின்றார், கேட்கின்றார். பேச்சுக்களெல்லாம் முடிந்தபின், மந்திரியார் நன்றி கூறும்போது கூறினார். முதலில் வரவேற்புரை கூறியவர் ஒரு தமிழ் ஆசிரியர், அவர் பேச்சு என்னை வெகுவாக கவர்ந்தது. எனக்குத் தமிழ் தெரிந்திருந்தால் அதிகம் மகிழ்ந்திருப்பேன். ஆங்கிலத்தில் கேட்டே அவரது அறிவாற்றலையும் செயல் திறமையையும் வியந்தேன். இந்தத் தமிழ் ஆசிரியரின் பெற்றோர் ஏழைகளாக இருந்திருப்பார்கள் போல் தெரிகிறது. வசதி படைத்தவர்களாக இருந்திருப்பார்களானால் இவருக்கு ஆங்கிலக் கல்வியும் படிப்பித்திருப்பார்கள். அவருடைய இயற்கை விவேகத்திற்கும், அறிவாற்றலுக்கும் எவ்வளவோ உயர்ந்த பதவிகளைப் பெற்றிருக்கலாம். துரதிஷ்டவசமாக அப்பொழுது இலவசக் கல்விமுறை இருக்கவில்லை, என்று இவரை ஆதாரங்காட்டித் தமது இலவசக் கல்விக் கொள்கையை வலியுறுத்தினார்.

வேலணை மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்படுவதற்கு ஏற்பட்ட வழிமுறை:- (இக்கூற்று உண்மையென சேர்.வைத்திலிங்கம் துரைசாமி 1957.2.09ஆம் திகதி உறுதிப்படுத்தினார் - அத்துடன் லண்டனில் வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் ஒரு வருடத்துக்கு முன்னர் வெளிப்படுத்திய மும்மணிகள் என்ற நூலிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.)

வேலணை மத்திய கல்லூரி ஸ்தாபிக்கப்படுமுன்னர் அதனை வலிகாமம் மேற்கில் இயங்கிவந்த சுழிபுரம் கல்லூரியுடன் இணைக்க எண்ணியவேளை கொழும்பு கல்வி திணைக்களத்தில் வேலை பார்த்து வந்த ஆசிரியமணியின் நண்பர் ஒருவர் மூலம் ஆசிரியமணி இவ்விடயத்தைப் பற்றி அறிந்தார். ஆசிரியமணி தலைமை ஆசிரியராகவும் வேலணை கிராமசபைத் தலைவராகவும் வேலணைத் தீவு சைவ இளைஞர் சபையின் தலைவராகவும் செயற்பட்டுக் கொண்டிருந்த வேளை சைவ இளைஞர் சபையாருடன் இணைந்து செயலில் இறங்கினார். யாழ். வலயக் கல்வி அதிகாரியுடன் சந்தித்து கலந்துரையாடி அச்சமயம் சபாநாயகராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமியை கொழும்பு சென்று பேட்டி கண்டு அவரிடம் உரையாடி ஆங்கிலப் பாடசாலையை தீவுப்பகுதியில் அமைப்பதே சாலப் பொருத்தம் என்பதை சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கினார். இவரது கருத்துக்களையும் தீவுப் பகுதி மக்களின் தேவைகளையும் ஆதாரபூர்வமாக உணர்ந்து கொண்ட சபாநாயகர் சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி அதற்கு இணக்கம் தெரிவித்தார். அதன் பயனாகவே வேலணை மத்திய கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது என்பது உண்மையிலும் உண்மை.

''எனது முதல் ஆசிரியர் '' (செ. குணரத்தினம்) முன்னாள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தலைவர்.

பெரிய உபாத்தியாயர் என்று என்னால், எங்கள் குடும்பங்கள், ஊரவர் அனைவரினாலும் அழைக்கப்பட்ட பண்டிதர் இராமநாதர் மருதையனார் எங்கள் காலத்தில் வாழ்ந்த ஒரு மாமனிதர். எனக்கு அரிச்சுவடி கற்பித்த நல்லாசான். அவரது கம்பீரமான தோற்றம், சொல்வன்மை, பல்துறைப் புலமை, பா இயற்றும் ஆற்றல், நகைச்சுவை, சங்கீத அறிவு, கலா ரசனை போன்ற தனித்திறன்கள் அனேகம்.

அவர் இருக்கும் இடமெல்லாம் இனிமை ததும்பும், விவேகம் நிலவும் தாரகை, நடுவன் காட்சி டீ.கே.சி. என்ற சிதம்பரநாதன் முதலியார் வட்டத்தொட்டி என்று அழைக்கப்படும் இலக்கிய அறிஞர் குழுவினை எப்படிக் கொண்டிருந்தாரோ அவ்வண்ணம் அமைந்தது பெரிய உபாத்தியாயரைத் தலைவராகக் கொண்ட சபை. பேச்சுக்கலையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் விளங்கி மறக்க முடியாத சொற்பொழிவுகளை நடத்தி பேரறிஞர்களின் பாராட்டுக்களைப் பெற்றார். இவ்வாறு பல துறைகளில் எடுத்துக் காட்டாக விளங்கிய இம்மாமனிதர், சமகால அரசியல்துறைப் பிரமுகர்களின் பாராட்டுக்களையும் பெற்றார். சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமியும் அவர் குடும்பத்தினரும் இவரின் ஆற்றலிலும் மதியுகத்திலும் பெரும் மதிப்பு வைத்து அன்புரிமை கோரி நண்பர்களாக வாழ்ந்தார்கள்.

“சாதனைகள் பல புரிந்த விவேகி ” -

(சி. இராஜரட்ணம், ஓய்வுபெற்ற அதிபர்)

பிரித்தானிய செந்தமிழால் செழிப்புடைய மருதையனார் சரித்திரத்தில் இடம்பெற்ற பெரியவர். மிக்க சாதனைகள் பலபுரிந்த விவேகி. அரசியலில் கிராமசபைத் தலை-வராக ஆற்றிய நற்சேவை பல. அவற்றுள் ஒன்று வேலணையில் பிரசவ விடுதி-தனை ஸ்தாபித்தார்.

அது வேலணையில் வளர்ந்து இப்போது அரச மருத்துவமனையாகி உள்ளக சிகிச்சை பெறும் வசதிகளையும் கொண்டுள்ளது. அம்மருத்துவ மனை அவரை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

“அரசியற் பணி ” - (டி.எம்.ஆர்)

ஆசிரியமணியின் அரசியற் பணி பிரசித்தமானது தன் சுயநலத்திற்காக தன் குடும்ப நலனுக்காக தன் அரசியல் சித்தாந்தங்களை மாற்றிக் கொண்டவர் அல்ல. அவரு-டைய அரசியல் சிந்தனையானது சுயநிர்ணயம் என்பது ஓர் இனத்தின் அடிப்படை உரிமை, இது புனிதமானது, காப்பாற்றப் படவேண்டியது என்பது இவர் சித்தாந்தம்.

சுயநிர்ணய உரிமையை அடகுவைத்து எந்தவொரு பட்டத்தையோ பதவியையோ வைத்திருக்க வேண்டியது இல்லை என்பதற்கு இணங்க தனது சமாதான நீதிவான் பட்டத்தை 1983இல் சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்துத் துறந்தார். இவரது செயல்கள் தனித்துவ மானவை. இவரது ஆளுமை தனித்துவமானது.

இவர் விட்டுச் சென்ற விழுமியங்கள் தனித்துவமானவை, இவர் முயற்சியால் உயர்ந்த மாமனிதர். இவரது தனித்துவம் போற்றுதற்குரியது. அரசியலில் ஈடுபட்டவர்கள் செய்யாத ஒரு செயலை இவர் செயலில் செய்து காட்டியவர். அதாவது வேலணை கிராம சபைத் தலைவராக செயற்பட்ட வேளையில் பலரை அழைத்து தேனீர் விருந்து உபசாரம் வழங்கிய பின்னர் தானாகவே முன்வந்து தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்தவர் என்பது ஒரு முக்கிய வரலாறாகும்.